இருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியுமா என்று கேட்கிறார்கள். அது நிபுணர்களைக் கேட்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்

(அ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான காலவரையறையை நீட்டித்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. சோ. அழகர்சாமி, திரு. எ. ஆர். மாரிமுத்து இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, 1 முதல் 30 வரையுள்ள மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்களை 2—3—1973 அன்று பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக, 3—3—1973 அன்று பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்கவேண்டும் என்று அறிவிக்கிறேன்.

(ஆ) உரிமைப் பிரச்னை ஒத்திவைக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. ஜி. ஆர். எட்மண்ட், திரு. நா. வீராசாமி, திரு. எஸ். முகமது கோதர் முகைதின் ஆகியோர் சட்டப் பேரவை விதிகளுக்கிணங்க உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள். அவற்றை நான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறேன். அவை நாளைய தினம் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) நடைமுறைக் கேள்விகள்

(அ) பேரவையில் எம். ஜி. ஆர். கட்சி என்று இருப்பதாகப் பத்திரிகைகள் குறிப்பிடுவது குறித்து

THIRU G. R. EDMUND : Sir, on a point of Order. கடந்த 26—2—1973 அன்று சட்டமன்றத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளை எதிர்த்து இங்கே இருக்கின்ற எதிர்க் கட்சிகளைச் சார்ந்த . . .

MR. DEPUTY SPEAKER : This is not a point of order. பிரிவிலேஜ் மோஷன் கொடுத்து இருக்கிறீர்கள். அது பற்றித்தானே பேசப் போகிறீர்கள் ?